FWC

# தவணைப் பரீட்சை, நவம்பர் - 2017
# Term Examination, November - 2017

| கிறிஸ்தவம் | தரம் :- 12 (2019) | புள்ளித்திட்டம் |
|---|---|---|

## பகுதி I

| | | | |
|---|---|---|---|
| 1) – 2 | 6) – 1 | 11) – 3 | 16) – 5 |
| 2) – 3 | 7) – 3 | 12) – 1 | 17) – 4 |
| 3) – 4 | 8) – 5 | 13) – 5 | 18) – 2 |
| 4) – 5 | 9) – 2 | 14) – 2 | 19) – 1 |
| 5) – 1 | 10) – 4 | 15) – 4 | 20) – 3 |

(20X1=20 புள்ளிகள்)

## பகுதி II

### பகுதி - அ

1)
1. பஞ்சாகமம், நீதிசட்டம், மோசேயின் சட்டம், மோசேயின் நீதி நூல்
2. யோவான், பேதுரு, சிறிய யாக்கோபு, யூதாததேயு (யூதா)
3. தோபித், யூதித்து, சாலமோனின் ஞானம், சீராக்கின் ஞானம், பாரூக்கு 1,2 மக்கபேயர்.
4. கற்பித்தல், தீய எண்ணங்களை அகற்றுதல் (தண்டித்தல்), சீராக்குதல், நேர்மையான வாழ்வதற்கான பயிற்சி அறிவை வழங்குதல்.
5. கானான், இஸ்ராயேல், வாக்களிக்கப்பட்டநாடு, பரிசுத்த பூமி (புண்ணிய பூமி)

2)
01) பெத்தேல், சீலோ, செக்கேம், கெரிசிம்மலை
02) நிரந்தரமாக விவசாயத்தில் ஈடுபட்டனர்.
நிலபுலன்களை உரிமையாக்கிக் கொண்டனர்.
தற்காலிக கூடாரங்களுக்குப் பதிலாக நிரந்தர வீடுகளை கட்டுவதற்கு முயன்றனர்.
வீடுகளை அலங்காரமாக வைத்திருத்தனர்.
கலாசார ஆரம்பத்துக்கு படிப்படியாக அடித்தளம் இட்டனர்.
03) 1. உடன்படிக்கை வாசித்தல்
2. வெளிநாட்டு மனைவியரை வெளியேற்றுதல்
3. உடன்படிக்கையை புதுப்பித்தல்
4. ஓய்வுநாள் விடுமுறையை நடைமுறைப்படுத்தல்
04) யாவே (J) பாரம்பியம் - கி.மு 900
எலோகிம் (E) பாரம்பரியம் - கி.மு 722
இணைச்சட்ட (D) பாரம்பரியம் - கி.மு 621
குரு (P) பாரம்பரியம் - கி.மு 400
05) இலகுவானவை, தெளிவானவை, வித்தியாசமானவை, நாடக அமைப்பைக் கொண்டவை, இயற்கையானவை, உயிருள்ளவை, உருவக அமைப்பு கொண்டவை.

3)
01) முதற்பாவம், காயின் ஆபேல் கதை, வெள்ளப்பெருக்கு கதை, பாபேல் கோபுர கதை
02) இறைவனின் கட்டளை உ+ம் ஒளி தோன்றுக.
இறைவனின் கட்டளை நிறைவேற்றப்படல் உ+ம் ஒளிதோன்றுதல்
இறை படைப்பை நல்லதெனக் காணல். உ+ம் அது நல்லதெனக் கண்டார்.
காலத்தைக் கணித்தல் உ+ம் காலையும் மாலையும் ……………ஆயிற்று.

03) ஆண்டவராகிய கடவுள் இஸ்ராயேலரை பாலைவனத்திலிருந்து காப்பாற்றினார்.
அவர் அவர்களை செழிப்பான நாட்டிற்கு அழைத்துச் சென்றார்.
அப் பயணத்தின் போது அவர் அவர்களுக்கு பத்துக் கட்டளைகளைக் கொடுத்தார்.
அவர்கள் அதற்கு மதிப்பளிக்காது அந்நியதிகளை மீறியதால் அவர்களுக்கு தண்டனையும் கிடைத்தது.

04) ஆதிப்பெற்றோர், ஆபிரகாம், ஈசாக், யாக்கோபு, நோவா

05) யாக்கோபு மிகவும் அன்பு செய்த மனைவி ராகேலின் புதல்வனாக யோசேப்பு இருந்தமை.
முதிர்ந்த வயதில் தமக்கு யோசேப்பு பிறந்தமை.
தம் சகோதரைப் பற்றி தேடிப் பார்த்தமை.
இறைவனின் விசேட பார்வை யோசேப்புக்கு இருந்தமையை யாக்கோபு உணர்ந்தமை.

4)

01) இறை ஏவுதலின் வகைகளாக ஆயத்துவ இறை ஏவுதல், போதனைக்கான இறை ஏவுதல், எழுத்தாக்கத்துக்கான இறை ஏவுதல் இவை பற்றி விளக்கியிருப்பின் 10 புள்ளிகள் வழங்கவும்.

02) மூல ஆசிரியர் இறைவன், துணை ஆசிரியர் மனிதன் செயற்பாடு பற்றி விளக்கிருப்பின் 10 புள்ளிகள்.

5)

01) பலஸ்தீனாவின் புவியல் பின்னணி பற்றி ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டியில் கூறப்பட்ட தரைத்தோற்ற அமைப்பு, எல்லைகள், நிலப்பரப்பு என்பவை பற்றி விளக்கியிருப்பின் 10 புள்ளி வழங்கவும்.

02) சவுல், தாவீதைத் தொடர்ந்து சாலமோன் அரசனானதால் சாலமோன் அரசன் சிறப்பான முறையில் ஜெருசலேம் ஆலயத்தை கட்டினான்.
ஆலயத்தைக் கட்ட அதிக செலவு ஏற்பட்டதால் அதிக வரி செலுத்த வேண்டும் என நிபந்தனை விதித்தல்.
இந்நிபந்தனையால் வடபகுதி மக்கள் பாதிப்படைதல்
யூத பரம்பரையில் சிறந்த அரசனாக இருத்தல்
வடபகுதி மக்கள் ஜெரோபோவாவை தலைவனாகக் கொண்டு புரட்சி செய்தல்.
இக்காலப்பகுதியில் சாலமோன் இறந்த போது அவனது மகன் றெகெபோவாம் ஆட்சிக்கு வருதல்.
மக்கள் நிபந்தனைகளைக் குறைக்க வேண்டிய போது அவன் மறுத்ததால் வடபகுதி 10 கோத்திரமாகம், தென்பகுதி 2 கோத்திரங்களையும் கொண்டது. வடஅரசின் தலைநகரம் செக்கேமும் தென்னரசின் தலைநகரம் எருசலேமும் ஆகும்.
தென்அரசு – நெகெபோவாமும், வட அரசு ஜெரோபோவாமாலும் ஆட்சி செய்யப்பட்டது.

6) 01) இறைவன் காட்டும் நாட்டுக்கு செல்ல கட்டளை இடப்படுகிறது.
விசுவாசப் பயணத்தில் மிகவும் வேதனையான கடினமாக பல தீர்மானங்களை எடுக்க வேண்டி ஏற்பட்டமை.
ஈசாக்கை பலியிட வேண்டிய போது துணிவுடன் பலியிடச் சென்றார்.
அவரிடம் காணப்பட்ட விசுவாசம், எதிர்நோக்கு, உண்மை அன்பு, பொறுமை, கீழ்ப்படிவு, திடமான நம்பிக்கை போன்ற பண்புகள் விசுவாசப்பயணத்துக்கும் சவால்களுக்கும் பெரிதும் உதவின போன்ற விடயங்கள் விளக்கியிருப்பின் 10 புள்ளிகள் வழங்கவும்.

02) இளம் வயதில் தன்னை கொல்வதற்கு (பலியிடுவதற்கு) ஏற்பாடு செய்த தம் தந்தையை அவர் ஒரு போதும் பழிவாங்கவில்லை. இது அவரிடம் காணப்பட்ட நல்ல மனிதப் பண்பு.
தம் பெற்றோரின் அனுமதியுடன் 40 வயதில் திருமணம் செய்து மனைவியுடன் அமைதியாக வாழ்ந்தார்.
இவர் நேர்மையானவர், கீழ்ப்படிவுள்ளவர்
நாட்டின் கலாச்சாரங்களுக்கு மதிப்பளித்தவர்
யேசு தனது சிலுவையை தானே சுமந்து சென்றது போல ஈசாக்கும் தன்னை பலியிடுவதற்கு விறகுக் கட்டைகளை தானே சுமந்து சென்றார்.
அவரின் கபடற்ற தன்மை, கீழ்படிவு காரணமாக ''துன்புறும் ஊழியன்'' என்ற உருவை ஏற்றவர் இவ்வாறான கருத்துக்கள் தந்து விளக்கியிருப்பின் 10 புள்ளிகள் வழங்கவும்.